**FIRST INFORMATION REPORT**
**முதல் தகவல் அறிக்கை**
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110245

1. District : Coimbatore மாவட்டம் PS: V&AC காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No.: 07/2020/AC/CB மு.த.அ. எண் Date: 24.10.2020 நாள் 0800 hrs

2. (i) Act சட்டம்: PC Act 1988 as amended Sections பிரிவுகள்: 7 (a)
   (ii) Act சட்டம்: by the Prevention of Corruption Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: [Amendment] Act 2018. Sections பிரிவுகள்:
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from நாள் முதல் : 22.10.2020 Date to : நாள் வரை 23.10.2020
   Time Period : நேர அளவு Time from : நேரம் முதல் at about 17.30 hrs Time to : நேரம் வரை at about 11.30 hrs and 14.30 hrs
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 24.10.2020 Time : நேரம் 07.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் 24.10.2020 Time : நேரம் 07.00 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Computer Tamil typed complaint

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் Appox 7 km south
   Beat Number : முறைக் காவல் எண்
   (b) Address : முகவரி Campus of Fire and rescue services office, Coimbatore south, state Bank Road, Coimbatore.
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. Madhanavel (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் M. Nagarajan
   (c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 42/2020 (d) Nationality : நாட்டினம் Indian (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : தொழில் Medical shop (g) Address : முகவரி Door No. 103, Thiruvalluvar nagar, Kuniyamuthur, Coimbatore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள்
   (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr. Sasikumar, station Fire officer, o/o Fire and Rescue services, Coimbatore south, State Bank road, Coimbatore.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம் no delay

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் கருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் ............................ பதவி ..................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு ............................................ காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்துக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. [signature] 24/10/2020

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

[signature] 24.10.2020
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
24.10.2020 - 0900 hrs.

Name: பெயர் P. PARIMALADEVI
Rank: நிலை Inspector No. எண் of Police
VSAC, Coimbatore.

**சமர்ப்பிக்கப்படுகிறது:**

**கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2020/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018 வழக்கின் முதல் தகவலறிக்கையின் தொடர்ச்சி.**

24.10.2020-ம் தேதி சனிக்கிழமை காலை 07.00 மணிக்கு காவல் ஆய்வாளர் P.பரிமளாதேவி ஆகிய நான் நிலைய அலுவலில் இருந்த போது, கோயம்புத்தூர், குனியமுத்தூர், திருவள்ளுவர் நகர், கதவு எண்-103, என்ற முகவரியில் குடியிருந்து வரும் நாகராஜன் மகன் N.மதனவேல், வயது-42, என்பவர் கோவை ஊ.த.க அலுவலகம் ஆஜராகி தமிழில் தட்டச்சு செய்த ஒரு எழுத்து மூலமான புகார் மனுவை என்னிடம் கொடுத்தார். நான் அந்த புகாரினை படித்து பார்த்தேன். புகார் சம்மந்தமாக ரகசிய விசாரணையும் மேற்கொண்டதில் கோவை தெற்கு தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் நிலைய தீயணைப்பு அலுவலர் திரு.சசிக்குமார், பட்டாசுக்கடை வைக்க புகார்தாரரது இடத்தை Verification முடித்து புகார்தாரரின் பைலை பரிந்துரை செய்து அவரது வேலையை முடித்து கொடுக்க லஞ்சமாக பணம் கேட்டது தெரியவந்தது. புகாரின் அடிப்படையில் எதிரியின் நற்பெயர் குறித்து இரகசிய விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் எதிரியின் நடத்தை சர்ச்சைக் குரியது என்றும், புகார்தாரருக்கும் எதிரிக்கும் தனிப்பட்ட முறையில் ஏதேனும் முன்விரோதம் உண்டா என்பது குறித்தும் மேற்கொள்ளப்பட்ட இரகசிய விசாரணையில் அவ்வாறு முன்விரோதம் ஏதுமில்லை என்றும் தெரியவந்தது. நான் மேற்கொண்ட ரகசிய விசாரணையில் இருந்து எதிரி மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்ய தகுந்த முகாந்திரம் இருப்பதாக தெரியவந்ததால், சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை இயக்குநரகத்தில் வாய்மொழியான ஒப்புதல் பெற்று, இன்று 24.10.2020-ம் தேதி காலை 08.00 மணிக்கு கோயம்புத்தூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு குற்ற எண்.07/2020/AC/CB, u/s. 7(a) of the Prevention of Corruption Act, 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி மேற்படி எதிரி திரு.சசிக்குமார், மீது குற்ற வழக்கு பதிவு செய்தேன். புகார்தாரரின் புகாரின் விபரம்

பின்வருமாறு: அனுப்புனர் N.மதனவேல், வயது-42, த/பெ. M.நாகராஜன்,103, திருவள்ளுவர் நகர், குனியமுத்தூர், கோயம்புத்தூர். பெறுநர் காவல் ஆய்வாளர், லஞ்ச ஒழிப்பு துறை, கோயம்புத்தூர். அய்யா, நான், கோயம்புத்தூர் குனியமுத்தூரிலுள்ள திருவள்ளுவர் நகர், க.எண்.103-ல் எனது குடும்பத்துடன் குடியிருந்து வருகிறேன். நான் குனியமுத்தூர், பாலக்காடு மெயின்ரோட்டில் உள்ள சௌதா மருந்து கடையில் வேலை செய்து வருகிறேன். தீபாவளி நெருங்கி வருவதால் பட்டாசுக்கடை வைக்கலாம் என முடிவுசெய்து அதற்கான வழிமுறைகளை எனது நண்பர் மூலம் கேட்டு தெரிந்து கொண்டு மதுக்கரை, சுந்தராபுரம் ரோட்டில் க.எண்.11/234 என்ற முகவரியில் உள்ள ராமகிருஷ்ணன் என்பவருக்கு சொந்தமான இடத்தில் பட்டாசுக்கடை வைத்து நடத்த முடிவுசெய்து அட்வான்ஸ் ரூ.5,000/- மற்றும் மாத வாடகையாக ரூ.4,500/-ஐ பேசி முடித்து 20 ரூபாய் ஸ்டாம்ப் பேப்பரில் 03.10.2020-ம் தேதி எங்களுக்குள் கடை வாடகை ஒப்பந்தம் செய்தோம். மேற்படி இடத்தில் தற்காலிகமாக பட்டாசுக்கடை வைப்பதற்கு 09.10.2020-ம் தேதி கலெக்டர் ஆபிசுக்குள் உள்ள டிரஸ்சரியில் ரூ.700/- செலுத்தி ரசீது பெற்றேன். அதன்பின் பட்டாசுக்கடை வைத்து நடத்த லைசன்ஸ் பெறுவதற்காக 10.10.2020-ம் தேதி கலெக்டர் ஆபிசில் இ-சேவை மையத்தில் உரிய ஆவணங்களை இணைத்து, எனது செல்போன் நம்பரையும் கொடுத்து கட்டணம் ரூ.500/- செலுத்தி ஆன்லைன் மூலமாக விண்ணப்பம் செய்து அதற்கான ஒப்புகைச்சீட்டை பெற்றுக்கொண்டேன். அதன் பின்னர் பட்டாசுக்கடை வைக்க எந்த தகவலும் எனக்கு கிடைக்காததால் நான் 22.10.2020-ம் தேதி மாலை சுமார் 5.30 மணியளவில் கோயம்புத்தூர் இரயில்நிலையம் அருகில் உள்ள கோவை தெற்கு தீயணைப்பு மற்றும் மீட்புபணிகள் ஆபிசுக்கு, பட்டாசுக்கடை வைப்பது சம்மந்தமாக விசாரிக்க நான் இ-சேவை மையத்தில் ஏற்கனவே இணைத்து கொடுத்திருந்த ஆவணங்களுடன் சென்றேன். அப்போது அங்கு யூனிபார்மில் ஒருவர் வந்தார். அவரது Name plate-ஐ பார்த்தபோது அதில் சசிக்குமார் என்ற பெயர் இருந்தது. அவர் என்னை யார் என்றும், என்ன விசயமாக வந்தீர்கள் என்றும் கேட்டார். நான் விபரம் சொன்னேன். அதற்கு அவர் நான்தான் மதுக்கரை நிலைய தீயணைப்பு அதிகாரி சசிக்குமார் என்று என்னிடம் பேசிக்கொண்டே மேற்படி அலுவலக வளாகத்தை விட்டு வெளியே வந்த மேற்படி சசிக்குமார் அவர்கள் நீங்கதான் மதனவேலா, நீங்க ஏற்கனவே பட்டாசுக்கடை நடத்தியிருக்கீங்களா என்று கேட்டார், அதற்கு நான் இதுதான் First time சார் என்று

சொன்னேன். அதற்கு அவர் அதனாலதான் உங்களுக்கு பார்மாலிட்டீஸ் தெரியவில்லை என்றும், பரவாயில்ல நீங்களே வந்திட்டீங்க என்று சொன்னார். உங்க இடத்தை நான்தான் வெரிப்பிகேசன் பண்ண வருவேன் எங்கிட்டையே பைலை கொடுங்க என்று சொன்னார். நான் வைத்திருந்த ஆவணங்களை சசிக்குமார் சாரிடம் கொடுத்துவிட்டு வேறு ஏதாவது டாக்குமண்ட் கொடுக்கனுமா சார் என்று கேட்டேன். அவர் நான் கொண்டு வந்த எனது பைலை பார்த்துவிட்டு இதுல இருக்கிறதே போதும் என்றும், நீங்க முதன்முதல்ல பட்டாசுக்கடை வைக்கிறீங்க, பொதுவா பைலை பார்வேடு பண்ணுவதற்கு 15 ஆயிரம் offer செய்வோம் என்றார். நான் சார் கொஞ்சம் கம்மி பண்ணுங்க என்று கேட்டேன். அவர் சரி நீங்க 10 ஆயிரம் கொடுத்துடுங்க என்றும், இப்பவே பணம் கொடுக்குறீங்களா என்றும் என்னிடம் கேட்டார். அதற்கு நான் என்னிடம் இப்போ பணம் இல்லை என்றும் பணத்தை ரெடி செய்துகொண்டு வருகிறேன் என்று சொன்னேன். அதற்கு அவர் அவரது செல் போன் நம்பர் 9790417725-ஐ என்னிடம் கொடுத்து என்னுடைய செல் போன் நம்பர் 7339522395-ஐ வாங்கிகொண்டு, போன் பண்ணிட்டு வாங்க என்று சொன்னார். நான் போன் ஏதும் பண்ணாததால 23.10.2020-ம் தேதி காலை சுமார் 11.30 மணியளவில் சசிகுமார் சாரே எனக்கு போன் பண்ணி டவுன்ஹால் பக்கத்தில வரமுடியுமா என்று கேட்டார். அதற்கு நான் இப்ப வர முடியாதுங்க சார் என்றேன், அவர் எங்கே இருக்கீங்க என்று என்னிடம் கேட்டார், நான் குனியமுத்தூரில் ஒரு வேலையா இருக்கிறேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் இப்போ பணம் கொண்டு வர முடியுமா என்று கேட்டார், என் வேலையை முடித்துவிட்டு கால் பண்றேன் சார் என்று சொன்னேன். அதற்கு அவர் ஓகே என்று சொன்னார். எனது வேலையை முடித்த பின்னர் அன்று மதியம் சுமார் 2.30 மணிக்கு நான் சசிக்குமார் சாரை எனது செல்போனில் அழைத்து பேசினேன். அப்போது அவர் உங்க இடத்தை வெரிபிகேஷன் செய்து வேலையை முடித்துகொடுக்க ஏற்பாடு செய்வதற்கு ரூ.10,000/-ம் ரெடியா இருந்தா கொடுத்து விடுங்கள் என்று சொன்னார். அதற்கு நான் அவரிடம் பணத்தை கொஞ்சம் கம்மி பண்ணுங்க சார் என்று கேட்டேன். அதற்கு அவர் எல்லாருமே இப்படி சொன்னா எப்படிங்க, இருக்கிறவங்களிலேயே நான்தான் பணம் கம்மியா வாங்கிட்டு செஞ்சு கொடுக்கறேன், வேணும்னா விசாரிச்சுபாருங்க என்றும், சரி கம்மி பண்ணிக்கிறேன் என்று சொல்லி பணம் ரூ.6,000/-ம் கொடுத்துடுங்க உங்க வேலையை முடித்துக் கொடுக்கிறேன் என்றும், வரும்போது எனக்கு போன் பண்ணிட்டு வாங்க

என்று கூறினார். மேற்படி இடத்தில் பட்டாசுக்கடை வைக்க verification முடித்து எனது பைலை பரிந்துரை செய்து எனது வேலையை முடித்து கொடுக்க மேற்படி திரு.சசிக்குமார், அவர்களுக்கு ரூ.6,000/- லஞ்சம் கொடுக்க எனக்கு விருப்பம் இல்லை. எனவே என்னிடம் ரூ.6,000/- லஞ்சம் கேட்கும் திரு.சசிக்குமார், நிலைய தீயணைப்பு அலுவலர், தீயணைப்பு மற்றும் மீட்புப்பணிகள் அலுவலகம், கோவை தெற்கு என்பவர் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இடம்: கோவை, நாள்: 24.10.2020, இப்படிக்கு, sd.XXXXX 24.10.2020. Madam / Sir, Received the complaint on 24.10.2020 at 0700 hrs. sd.XXXXX 24.10.2020, Inspr, V&AC, Coimbatore. Madam/Sir, After conducting discreet enquiry, a case in Coimbatore V&AC Cr.No.7/2020/AC/CB, u/s 7(a) of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment) Act 2018 was registered by me on 24.10.2020 at 08.00 hrs. sd.XXXXX 24.10.2020, Inspector/V&AC, Coimbatore. முதல் தகவல் அறிக்கையின் அசல் மற்றும் வாதியின் புகார் மனு ஆகியவற்றை கனம் சிறப்பு நீதிபதி, ஊழல் தடுப்பு சட்டங்களுக்கான சிறப்பு நீதிமன்றம், கோயம்புத்தூர் அவர்கள் நீதிமன்றத்திற்கும் மற்ற நகல்கள் சம்மந்தப்பட்ட அதிகாரிகளுக்கும் அனுப்பப்படுகிறது.

24.10.2020
Inspector of police
V&AC, Coimbatore.